பக்கங்கள்: 06
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 12 திங்கட்கிழமை 25.01.2021 கதிர் 312

## கோட்டாவின் ஆணைக்குழு இலங்கையை காப்பாற்றாதாம்!

இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை ஆராயும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தற்போது ☞2

# சுரேஷ் பிறேமச்சந்திரன் ஓர் அரசியல் விபச்சாரி!

## கஜேந்திரகுமார் காட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் ஓர் அரசியல் விபச்சாரி என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் காட்டமாக விமர்சித்துள்ளார்.



## ஒத்திவைப்புச் சிறையுடன் 3 தமிழக மீனவர் விடுவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஜன .25

இந்தியாவின் தஞ்சாவூர் மாவட்ட மீனவர்கள் 3 பேரும் மல்லாகம் நீதிமன்றால் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாதங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

ஜனவரி மாதம் 5 ஆம் திகதி தஞ்சாவூர் மாவட்டம் கள்ளிவயல் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்க புறப்பட்ட சக்திவேல்,பாலமுருகன், ☞2

## லொறி பின் சில்லில் சிக்கி மோ. சைக்கிள் பயணி பலி

### மட்டு. – திருமலை வீதியில் சம்பவம்



திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் பச்சிலை சந்தியில் இன்று சிமெந்து லொறியில் மோதுண்டு 65 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் மரணமடைந்தார். ☞2

## சஜித் கட்சியில் முக்கிய பதவி பெற்றார் உமாசந்திரா பிரகாஷ்



ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளராக உமா சந்திரா பிரகாஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்பின் பிரகாரம் கட்சியின் முதலாவது மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போதே கட்சித் தலைவரால் உமாசந்திரா பிரகாஷுக்கு பிரதி செயலாளர் பதவிக்கான நியமனக் கடிதம் வழங்கிவைக்கப்பட்டது. உமா, கட்சியின் மத்திய செயற்குழுவுக்கும் உள்வாங்கப்பட்டுள்ளார்.

## தீவகத்தில் கடற்படையினர் ஆக்கிரமித்த காணியை மீட்டுத்தரக் கோரி முறையீடு!



யாழ்ப்பாணம், வேலணை பிரதேச செயலர் பிரிவுட்குட்பட்ட மண்கும்பான் 5 ஆம் வட்டாரத்திலுள்ள கடற்படை பிரதான முகாம் அமைந்துள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 15 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கோரி இன்றைய தினம் காணி உரிமையாளர்களால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. ☞2

## பி.சி.ஆர். பரிசோதனைக்கு ஒத்துழைக்க மறுத்தமையால் சுத்திகரிப்பு நிலையம் சீல்!

பி.சி.ஆர். பரிசோதனையை புறக்கணித்தமையால் வாகன சுத்திகரிப்புநிலையத்துக்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் சீல் வைக்கப்பட்டது.

அந்தப் பிரதேசத்திலுள்ள அதிக ஆபத்துநிலைக்குரியவர்களை இனங்கண்டு அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ☞2

## தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எதிராக யாழ் நகரில் கவனவீர்ப்புப் போராட்டம்






(எஸ்.நிதர்ஷன்)

யாழ் சிவில் சமூகம் என்ற பெயரிலான ஏற்பாட்டில் யாழ் நகரில் இன்றைய தினம் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எதிராக கவனவீர்ப்புப் ☞2

## 27 நாள்கள் தனிமைப்படுத்தலின் பின்னர் வழமைக்குத் திரும்பியது கல்முனை நகர்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட கல்முனை நகரின் செய்லான் வீதி தொடக்கம் கல்முனை வாடிவீட்டு வீதி வரைக்குமான 11 கிராம சேவையாளர் பிரிவுகள் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருந்தன. ☞2



SCIENCE ACADEMY NALLUR ARIYALAI JAFFNA
சயன்ஸ் அக்கடமி
நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக நாவலர் வீதி, அரியாலை
தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற் தர நிறுவனம்
நிகரற்ற சிறப்பான நிர்வாக கட்டமைப்பின் கீழ் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில் 40 வருடங்களுக்கு மேலான கல்வி பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் சாதனை ஆண்டில் தொடர்கின்றது.
புதிய கல்வியாண்டு - 2021
வெற்றித்தேர்வு ஆரம்ப பிரிவு தரம் 1 முதல் தரம் 5 வரை வாராந்தம் பரீட்சைகளோடு
தமிழ் மொழி மூல வகுப்புகள் தரம் 6 முதல் O/L வரை
ENGLISH MEDIUM CLASSES GRADE 6 - O/L
இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும்
ஆரம்பம் - 28.01.2021 வியாழக்கிழமை காலை 9.00 மணி
இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள்!
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"
077 5388471, 077 3126807, 021 222 9016

## தமிழ்த் தேசியக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழ் கட்சிகள் பக்கச் சார்பாக செயற்பட்டு வருகின்றன எனவும் -

குறிப்பாக, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல், கொலை விடயங்களும் ஜெனிவாவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவது அவசியம் எனக் கட்டாயமாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டும் எனவும் -

எனினும், அந்த விடயம் தொடர்பில் தமிழ் கட்சிகள் எந்தவித கரிசனையும் செலுத்துவது இல்லை எனவும் -

எனவே இந்த நாட்டில் தமிழ் கட்சிகள் ஜனநாயக ரீதியாக செயல்படவில்லை எனவும் -

தெரிவித்து, ஆதலால் தமிழ் கட்சிகள் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றன எனக் குற்றம் சாட்டியும். அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## 27 நாள்கள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போது 27 நாள்களின் பின்னர் நேற்று (24 ஆம் திகதி) மாலை 06மணி முதல் இப்பிரதேசம் தனிமைப்படுத்தல் முடக்க நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது சுகாதார பிரிவினரின் அறிவித்தலுக்கமைய இந்த தகவலை தகவல் திணைக்களம் இன்று வெளியிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தனிமைப்படுத்தல் நிலையிலிருந்து வழமைக்கு திரும்பிய கல்முனை நகரத்தில் வர்த்தகர்கள் தமது கடைகளை திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பொது மக்கள் சுகாதார விதிமுறைகளுக்கமைய பொருள்கள் கொள்வனவு செய்தனர்.

பொதுச் சந்தை, போக்குவரத்து மற்றும் அலுவலகங்கள் மற்றும் பிரதான பஸ் நிலையம் என்பன வழமையான நிலையில் இயங்குகின்றமையையும் அவதானிக்க முடிந்தது. எனினும் பொது மக்களின் வருகை குறைந்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

தொடர்ந்தும் கொரோனா தொற்று பரவுவதை தடுப்பதற்காக சுகாதார நடைமுறைகளை பொது மக்கள் கடைப்பிடிப்பது அவசியமாகும் என்றும் சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## ஒத்திவைப்புச் சிறையுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மணி பாலா ஆகிய 3 மீனவர்கள் இலங்கை யாழ்பாணம் வடமராட்சி, தொண்டைமானாறு கடல் பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த போது அந்த பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த கடற்படையினரால் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு காரைநகர் கடற்படை முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்த 3 மீனவர்களின் வழக்கும் மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி அலெக்ஷ்ராஜா கிரேஸின் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது மூன்று மீனவருக்கும் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றத்திற்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாதங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் விசைபடகின் உரிமையாளரை வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி படகின் உரிய ஆவணங்களுடன் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும், தவறும் பட்சத்தில் மீன்பிடி விசைபடகு இலங்கையின் வெளிநாட்டு மீன்பிடி சட்டத்தின் கீழ் அரசுடமையாக்கப்படும் எனவும் நீதிபதி தீர்ப்பளித்தார்

இதனையடுத்து மீனவர்கள் அனைவரும் யாழ்பாணம் மாவட்டம் சிறை கட்டுப்பாட்டுக்கு கீழ் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் ஓரிரு நாள்களில் விமானம் அல்லது கடல் வழியாக இந்தியா திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## லொறி பின் சில்லில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மோட்டார் சைக்கிளில் பயணித்த - மூதூரை சேர்ந்த - 65 வயதுடைய சித்திக் என்ற நபரே அவரை முந்திச்செல்ல முயன்ற சிமெந்து லொறியின் பின் சக்கரத்தில் சிக்குண்டு அந்த இடத்திலேயே பலியானார் என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர் .

சம்பவம் இடம்பெற்ற பச்சிலைசந்திக்கு விரைந்த மூதூர் பொலிஸார் லொறியின் சாரதியை கைதுசெய்து மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## தீவகத்தில் கடற்படை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனியாருக்குச் சொந்தமான குறித்த 15 ஏக்கர் காணியில் கடந்த 30 வருடகாலமாக தீவகத்திற்கான கடற்படையின் பிரதான முகாம் அமைக்கப்பட்டு காணி கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த காணியினை சுவிகரிப்பதற்குரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் குறித்த 15 ஏக்கர் காணி உரிமையாளர்கள் தமது காணியினை பெற்றுத் தருமாறு கோரி யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டினைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பி.சி.ஆர். பரிசோத ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதில் வர்த்தகர்கள், சாரதிகள், வாகன சுத்திகரிப்புநிலைய ஊழியர்கள் மற்றும் ஆபத்து பிரதேசங்களிலிருந்து திரும்புவோர் என முன்னிலைப்படுத்தப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைக்காக குறித்த வாகன சுத்திகரிப்புநிலைய ஊழியர்கள் அழைக்கப்பட்டிருந்தபோதிலும் அவர்கள் பரிசோதனைக்கு சமுகமளிக்கவில்லை.

இதுதொடர்பாக பொது சுகாதார பரிசோதகர்கள் அவ்விடம் சென்று பரிசோதித்தபோது அதன் உரிமையாளர் ஒத்துழைக்கவில்லை என்று பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர்வரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்பட்டு முடிவுகள் கிடைக்கும் வரை அந்த நிறுவன செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தி சீல் வைக்கப்பட்டது. அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த நீண்ட தூர பயணங்களில் ஈடுபடும் பஸ்களின் சாரதி மற்றும் நடத்துனரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் கொரோனாதொற்று வேகமாக பரவிவரும் நிலையில் நோய்பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார திணைக்களத்துக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் இவற்றை மீறும் வகையில் செயற்படுவோர் மீது 1897 ஆம் ஆண்டின் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

## கோட்டாவின் ஆணைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைத்துள்ள ஆணைக்குழு நாட்டுக்கு எந்த விதத்திலும் கைகொடுக்கப்போவதில்லை. இது வெறுமனே கண்துடைப்பு நாடகம் என்பதை சர்வதேசம் நன்கு அறியும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இலங்கைக்கு சீனாவின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை ராஜபக்ஷ அரசு நிராகரித்தது. சீனாவை நம்பிக்கொண்டு அரசு எடுக்கும் முயற்சிகள் நாட்டை மிகப்பெரிய நெருக்கடிக்குள் தள்ளப்போகின்றது எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணையை ஏற்றுக்கொள்வதாக மஹிந்த ராஜபக்ஷ அரசு சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரமே தொடர்ச்சியாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நல்லாட்சி அரசு புதிய தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கி இலங்கை இராணுவத்தைப் போர்க் குற்றங்களில் சிக்கவைக்கவில்லை.

போர்க்குற்றங்களில் சிக்கவிருந்த இராணுவத்தையும், அதற்குத் துணை நின்ற தலைவர்களையும் எமது அரசில் எடுத்த நடவடிக்கைகள் காரணமாகக் காப்பாற்றினோம்.

2015 ஆம் ஆண்டு அமெரிக்கா கொண்டுவந்த புதிய தீர்மானத்தை நாம் நிராகரிக்காது இணை அனுசரணை வழங்கியதன் மூலமாகவே இலங்கைக்கான சர்வதேச ஒத்துழைப்புகள் கிடைக்கப்பெற்றன. தற்போதைய அரசு ஐ.நா. தீர்மானங்களிலிருந்து விலகிக்கொள்வதாக கூறியுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் அதற்கான எதிர்ப்பை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டன.

இந்த நிலைமை தொடருமாயின் இலங்கை தனித்து விடப்படுவதுடன், ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார தடைகளுக்கும் உள்ளாக நேரிடும் - என்றார்.

## சுரேஷ் பிறேமச்சந்திரன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போது எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஜெனிவா அமர்விற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைத்த வரைவில் இனப்படுகொலை என்ற வசனத்தை உள்ளடக்கவில்லை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பை கஜேந்திரகுமார் விரும்பவில்லை என்பது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுரேஷ் பிறேமச்சந்திரன் முன்வைத்திருந்தார்.

இந்நிலையில் இன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நடத்திய ஊடக சந்திப்பின் போது சுரேஷ் பிறேமச்சந்திரனின் மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டன.

அந்தக் குற்றச்சாட்டுக்களை கஜேந்திரகுமார் நிராகரித்தார். அதுமட்டுமல்லாமல் சுரேஷ் பிறேமச்சந்திரன் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் அவர் அடுக்கினார்.

அப்போதே அவர் 'அரசியல் விபச்சாரி' என சுரேஷ் பிறேமச்சந்திரனை கடுமையாக வைதார்.

ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட சுரேஷ் பிறேமச்சந்திரன், பின்னர் அதற்கு எதிராகத் திரும்பி, இந்தியப்படையுடனும் அதற்குப் பின்னர் இலங்கைப் படையுடனும் சேர்ந்து செயற்பட்டவர். அதன் பின்பு மஹிந்த ராஜபக்ஷவின் கடற்றொழில் அமைச்சில் ஆலோசகராகப் பதவி வகித்தவர். அதன் பின்பு மன்னிப்பு அளிக்கப்பட்டு, கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டார். அங்கும் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டே புலிகளுக்குக் காலை வாரி அவர்களை அழிப்பதற்குத் துணை போனார். அதன் பின்னர் கூட்டமைப்பையே குழப்பினார். இப்போது தமிழ் மக்கள் கூட்டணியைக் குழப்புகின்றார்.

இப்படி அரசியலில் மாறி மாறி குத்துக்கரணம் அடித்து அவர் தம்மை ஓர் அரசியல் விபச்சாரியாகவே அடையாளம் காட்டி வந்துள்ளார். - என்ற சாரப்பட கருத்துக் கூறினார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இது எதேச்சையாக நடந்ததா?

சில அரசியல் நகர்வுகளின் பின்னணி வெளியே தெரியாமல் இருக்கும். அவை கட்டவிழ்ந்து முடிந்த பின்னர்தான் பின்னணியைத் தேட வேண்டியிருக்கும்.

தமிழ்த் தேசிய தரப்பிலும் அப்படி ஒரு விடயம் இடம்பெற்றிருக்கின்றது.

கடந்த பத்து, பதினொரு வருடங்களாக இலங்கை விவகாரத்தை ஒட்டி ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நடவடிக்கைகளையும் அதை ஒட்டிக் கட்டவிழ்ந்த விடயங்களையும் அவதானித்து வருபவர்களுக்கு இப்போது இடம்பெற்றுள்ள ஒரு விவகாரம், எதேச்சையாக ஒரே சமயத்தில் நடந்த வெவ்வேறு சம்பவங்களா (Coincident) அல்லது ஒருங்கிணைந்த செயற்பாடா என்று தெரியவில்லை.

இந்த பத்து, பதினொரு ஆண்டுகளாக ஜெனிவாவில் இலங்கை விடயம் பல தடவைகள் எடுக்கப்பட்டு விட்டது. ஒவ்வொரு தடவையும் அது எடுக்கப்படும் போது இலங்கை மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளக் கோரி தமிழர் தரப்பினரால் வேண்டுகோள்கள் முன்வைக்கப்படும்.

கடந்த ஆண்டு வரை தமிழர் தரப்பில் நாடாளுமன்றத்தில் பிரதான பிரதிநிதித்துவத்தை வகித்து வந்த தமிழ்க் கூட்டமைப்பு, இலங்கை விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தனது நிலைப்பாட்டைத் தவறாது உறுப்பு நாடுகளுக்குத் தெரிவித்து வரும்; வந்தது. அச் சமயங்களில் எல்லாம் தமிழ்க் கூட்டமைப்பு ஏகப் பிரதிநிதித்துவம் என்ற கருத்தில் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை தனித்து முன்வைக்கும்.

கூட்டமைப்புக்கு வெளியில் நிற்கும் பிற கட்சிகளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்றவை, கூட்டமைப்பின் நிலைப்பாட்டை அடியோடு கண்டித்து விமர்சிக்கும். இலங்கை, சர்வதேச பிடியிலிருந்து தப்புவதற்கான காலக்கெடுவை – கால அவகாசத்தை – பெற்றுக் கொடுக்கும் விதத்தில் தமிழ்க்கூட்டமைப்பு செயற்படுவதாகவும் குற்றம் சுமத்தப்படும்.

இலங்கை விவகாரத்தை, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இருந்து ஐ.நா. பொதுச் சபைக்கோ அல்லது பாதுகாப்புச் சபைக்கோ அல்லது அது போன்ற பொருத்தமான ஒரு தளத்துக்கோ எடுத்துச் செல்லும்படி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற கட்சிகள் எல்லாம் வலியுறுத்தும், ஆனால் கூட்டமைப்பு மசிந்து கொடுக்காது. இதனையொட்டி கூட்டமைப்புக்கு எதிராகக் கடும் கண்டனக் குரல்கள் எழும். கூட்டமைப்பின் வாக்கு வங்கி இதனாலும் தேயும். ஆனால், கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை மாற்றாது.

இந்த நிலைமைதான் கடந்த பொதுத் தேர்தல் வரை – ஓகஸ்ட் மாதம் வரை – நீடித்தது. இப்போது நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பினர் பத்துப் பேருடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருவரும், தமிழ் மக்கள் கூட்டணியில் ஒருவருமாகத் தமிழ்த் தேசியத் தரப்பில் பதின்மூன்று பேர்.

அப்படியிருந்தும் கூட இந்த முத்தரப்புக்களுக்கும் இடையில் ஆரம்பத்தில் ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸில் அமர்வை அணுகும் முறைமை தொடர்பில் ஒற்றுமைப்பட்ட – இசைந்து போகின்ற – நிலைமை காணப்படவில்லை.

ஆனால், இந்த ஜனவரியில் திடுதிப்பென நிலைமை தலைகீழாக மாற்றமடைந்தது. மன்னார் சிவகரனின் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம், தமிழ்த் தேசியக் கட்சிகளையும் அந்தப் பாதையில் பயணிக்கும் பிற கட்டமைப்புக்களையும் ஒன்றிணைத்து கிளிநொச்சியிலும், வவுனியாவிலும் கூட்டிய கூட்டங்களில் மேற்படி மூன்று தமிழ் அரசியல் கூட்டணிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் சமர்த்தாக வந்து அமர்ந்திருந்து விவாதித்தனர். தங்களுக்குள் கருத்தியல் ரீதியாக மோதிக் கொண்ட போதும், தத்தமது இறுக்கமான நிலைப்பாடுகளினின்றும் விட்டுக் கொடுத்து, இறங்கி வந்து, சமரச இணக்கப்பாட்டுக்கு முன் வந்தனர். இந்தத் திடீர் மாற்றம் தமிழ்த் தேசியத் தரப்பிலேயே பலரையும் அதிசயிக்க வைத்தது.

அந்த அதிசயங்களில் ஒன்று “பொறுப்புக் கூறல் விடயத்தை நடைமுறைப்படுத்தச் செய்வதில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் செயற்றினற்றது. ஆகையால் இலங்கை விடயத்தில் பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தும் நோக்கில் இவ் விவகாரத்தை ஐ.நா. பொதுச் சபை மற்றும் பாதுகாப்புச் சபை போன்ற பொருத்தமான தளத்துக்கு மாற்றுமாறு கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளைக் கோர வேண்டும்” என்ற இணக்கமாகும்.

இதுவரை அப்படி விடயத்தை ஜெனிவா கவுன்ஸிலிருந்து இடம் மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த – இலங்கையைத் தொடர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கட்டி வைக்கும் நிலைப்பாட்டை மாற்றக் கூடாது என்று வலியுறுத்தி நின்ற – கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் வேறு வழியின்றித் தமது நிலைப்பாட்டில் ‘அந்தர் பல்டி’ அடித்து விட்டுக் கொடுத்தார் என்றும் விமர்சிக்கப்பட்டது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், சி.வீ. விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் போன்றோரின் கடும்பிடி காரணமாக வேறு வழியின்றி சுமந்திரன் விட்டுக் கொடுத்து இணங்கினார் என்றே கருதப்பட்டது.

ஆனால், தமிழ்க் கட்சிகளின் இந்தக் கூட்டங்கள் ஜனவரியில் நடைபெற முன்னர், இலங்கை தொடர்பாக இம்முறை ஜெனிவாவில் தாம் சமர்ப்பிக்கவிருக்கும் தமது அவதானிப்பு அறிக்கையை கடந்த டிசெம்பரிலேயே கொழும்புக்கு அனுப்பி வைத்திருந்தார் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையர். அதன் விவரம் இப்போது கசிந்துள்ளது. தமிழ்க் கட்சிகள் இணங்கிய – ஐ.நா. பொதுச் சபை அல்லது பாதுகாப்புச் சபை அல்லது அது போன்ற பிற தளத்துக்கு இலங்கையின் பொறுப்புக் கூறல் விவகாரத்தை மாற்றக் கோரும் – அதே விடயம் ஆணையாளரின் அறிக்கையிலும் அப்படியே உள்ளது.

மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்து நிலைப்பாட்டுக்கு இயங்கும் முடிவை அப்படியே கூட்டமைப்பு எடுத்தமை ‘கோஇன்ஸிடனா’? அல்லது முற்கூட்டியே ஆணையரின் அறிக்கையை அறிந்து இந்த நிலைப்பாட்டு மாறியதா கூட்டமைப்பு? தேடப்பட வேண்டிய விடயம் இது.

## வாசுதேவ மற்றும் ஹக்கீம் தொற்றில் இருந்து மீண்டனர்




கொரோனாத் தொற்றுக்கு உள்ளான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் பூரண குணமடைந்து சிகிச்சை நிலையத்தில் இருந்து வெளியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கடந்த வாரம் தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்தார்.

மேலும் கடந்த 10 நாள்கள் தொடர்பில் இருந்தவர்களையும் சுகாதார அதிகாரிகளின் அறிவுரையைப் பின்பற்றி தனிமைப்படுத்திக்கொள்ளுமாறும் ரவூப் ஹக்கீம் கேட்டுக் கொண்டார்.

அதன்பின்னர் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிற்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் தனிமைப் படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தார்.

அண்மையில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவிற்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகிய இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வட மாகாணத்தில் தனியார் கல்வி நிலையங்களை மீளத்திறக்க அனுமதி

கொவிட் – 19 தொற்றுநோய் காரணமாக இடைநிறுத்தப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களை இன்று 25 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மீள ஆரம்பிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வடக்கு மாகாணத்தில் தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்களை நடத்தவேண்டும் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், ஒவ்வொரு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியும் தனியார் கல்வி நிலையங்களில் கொவிட் – 19 சுகாதார நடைமுறைகள் பின்பற்றுவதைக் கண்காணிப்பாளர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வகுப்பில் இருக்கைகளின் திறனில் 50 சதவீதம் வரை அல்லது அதிகபட்சம் 100 மாணவர்களுக்கு மட்டுமே இடமளிக்க முடியும் என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயணத் தடை மற்றும் தனிமைப்படுத்தல் நடைமுறைப்படுத்தும் பகுதிகளில் தனியார் கல்வி நிலையங்களை நடத்த முடியாது என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று காலை 6 மணி முதல் பல பகுதிகள் தனிமைப்படுத்தலில்

நாட்டில் இன்று காலை 6 மணிமுதல் புதிதாக பல பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக கொவிட் பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி கண்டி, பூஜாபிட்டிய சுகாதாரப் பிரிவில் உள்ள பள்ளியகொட்டுவ மற்றும் கல்ஹின்ன கிராம சேவகர் பிரிவு.

அம்பலாந்தோட்டையில் உள்ள 140 போலானா தெற்கு கிராம சுகாதாரப் பிரிவுக்குள் உள்ள மெல்கொனிய கிராமம் ஆகிய பகுதிகள் இன்று காலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை நேற்றைய தினம் மாலை 6 மணி முதல் வெள்ளவத்தை பொலிஸ் பிரிவின் நசீர் தோட்டம், நிட்டம்புவ பொலிஸ் பிரிவின் திஹாரிய வடக்கு மற்றும் திஹாரிய கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளின் வாரண விகாரை வீதி, கத்தொட்ட வீதி மற்றும் ஹித்ரா மாவத்த வீதிகளுக்கு உட்பிரவேசிக்கும் பிரதேசங்களும், மினுவாங்கொட பொலிஸ் பிரிவின் கல்லொழுவ கிழக்கு மற்றும் கல்லொழுவ மேற்கு ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தலிலிருந்து நீக்கப்பட்டன.

அதேநேரம் மினுவாங்கொட பொலிஸ் பிரிவின் கல்லொழுவ பிரதேசத்தின் ஜும்மா பள்ளிவாசல் வீதி, ஹித்ரா மாவத்த, புதிய வீதி மற்றும் அகரகொட ஆகிய பகுதிகளில் நேற்று மாலை 6 மணிமுதல் புதிதாக தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக கொவிட் பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்தது.

## உக்ரைன் சுற்றுலா பயணிகள் மேலும் சிலர் நாடு வந்தடைவு!

உக்ரேனைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளில் மேலும் சிலர் மத்தளை சர்வதேச விமானநிலையத்தைநேற்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் வந்தடைந்தனர்.

உக்ரேன் விமான சேவைகளுக்குச் சொந்தமான பி.எஸ்.6385 ரக விமானத்தில் 189 சுற்றுலாப் பயணிகள் இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வரும் திட்டத்தின் கீழ் இவர்கள் நாடு திரும்பியுள்ளனர் என்பதுடன், இந்த நாட்டுக்கு வருகை தந்த 12 ஆவது உக்ரேன் நாட்டு சுற்றுலாக் குழுவினர் இவர்கள் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை உக்ரேனிலிருந்து வருகை தந்திருந்த 178 சுற்றுலாப் பயணிகள் மீண்டும் உக்ரேன் நோக்கி புறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுநாயக்க பாதுகாப்புப் பணியாளர் 11 பேருக்குக் கொரோனாத் தொற்று!

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வசே விமான நிலையத்தில் பணிபுரியும் 11 பாதுகாப்புப் பணியாளர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து லிமிடெட் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்கள் ஜா – எல பகுதியில் வசிப்பவர்கள் ஆவர்.

இந் நிலையில் சுகாதார அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் தங்களது வீடுகளில் தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதுகாப்பு படையினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த விமான நிலைய அதிகாரிகளின் மற்றொரு குழு பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

# சசிகலா 27ஆம் திகதி விடுதலை; கர்நாடக சிறைத்துறை தெரிவிப்பு



சொத்து குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட சசிகலா பெங்களூரு அக்ரஹாராவில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார். அவரது தண்டனைக் காலம் முடிந்து ஜனவரி மாதம் 27 ஆம் திகதி விடுதலை செய்யப்படுவார் என்று பெங்களூரு சிறை நிர்வாகம் அறிவித்தது.

இதையடுத்து சசிகலா தனக்கு விதிக்கப்பட்ட அபராதத்தொகை ரூ.10 கோடியே 10 ஆயிரத்தை பெங்களூரு தனி நீதிமன்றில் செலுத்தினார்.

விடுதலை ஆகும் நாள் நெருங்கிய நிலையில் சசிகலாவுக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கொரோனா தொற்றும் உறுதி செய்யப்பட்டது. சசிகலா 27 ஆம் திகதி விடுதலையாவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் தகவல் வெளியானது. சசிகலாவுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் அவரது ஆதரவாளர்கள் வரவேற்பு ஏற்பாடுகளை நிறுத்தி வைத்தனர்.

சசிகலாவின் உடல் நலம் தேறி வருவதாக மருத்துவமனை நிர்வாகம் இன்று தெரிவித்தது. உடல் நிலை சீராக இருப்பதால், அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்து இருந்து சாதாரண பிரிவுக்கு மாற்றவும் முடிவு செய்யப்பட் டுள்ளது.

இந்நிலையில், சசிகலா வரும் 27ஆம் திகதி விடுதலை செய்யப்படுவார் என கர்நாடக சிறைத் துறை தெரிவித்துள்ளது. சிறையில் சசிகலா விடுதலை தொடர்பான அனைத்து ஆவண பணிகளும் நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளை பொது விடுமுறை என்பதால் இன்றே அனைத்து சட்ட நடைமுறைகளையும் முடித்ததாக கூறப்படுகிறது.

# சிக்கிம் எல்லையில் பதற்றம் சீன வீரர்கள் ஊடுருவ முயற்சி



சிக்கிம் எல்லையில் ஊடுருவ முயன்ற சீன ராணுவத்தின் முயற்சியை இந்திய வீரர்கள் முறியடித்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில் கடந்த ஆண்டு மே மாதம் சீனா அத்துமீறலில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, இரு நாடுகளிடையே அப்போது முதல் மோதல் போக்கு நடைபெற்று வருகிறது. இரு நாடுகள் சார்பிலும் எல்லையில் படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

படைகளைத் திரும்பப் பெறுவது தொடாபாக இந்தியா, சீனா நாடுகளிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இரண்டரை மாதங்கள் இடைவெளிக்குப்பிறகு ஞாயிற்றுக்கிழமை 9 ஆம் சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்த நிலையில் சிக்கிம் எல்லையில் நகுலா பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த சீன வீரர்கள் இந்திய எல்லையில் ஊடுருவ முயற்சி செய்ததாகவும், இந்த ஊடுருவல் முயற்சியை இந்திய வீரர்கள் முறியடித்ததாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இரு நாட்டு வீரர்களிடையே நடந்த இந்த மோதலில் சீன வீரர்கள் 20 பேர் வரையில் காயமுற்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முப்படைகளின் கூட்டுப் போர் ஒத்திகை வெற்றிகரமாக அந்தமான் தீவில்!



அந்தமான் தீவில் இந்திய இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவை இணைந்து கூட்டுப் போர் ஒத்திகையை நடத்தியுள்ளன.

அந்தமான் கடல், வங்கக் கடல் பகுதியில் நடைபெற்ற இந்தப் போர்ப்பயிற்சியில் அந்தமான் படைத் தொகுதி, கடற்படையின் கிழக்குப் பிரிவு, இராணுவத்தின் தென்மண்டலப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த வீரர்கள் படைக்கலன்களுடன் பங்கேற்றனர்.

இந்திய கடலோரக் காவல்படையும் இந்தப் பயிற்சியில் இணைந்துகொண்டது.

முப்படைகளும் எந்தச் சூழலிலும் தயார் நிலையில் இருப்பதை உறுதிப்படுத்துவதும், இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்தியாவுக்கு உள்ள நலனைக் காப்பதும் இந்தப் போர் ஒத்திகையின் நோக்கம் எனக் கூறப்படுகிறது.

ஹெலிக்கொப்டர்கள், போர் விமானங்கள், கடற்படையின் ஜலஸ்வா, ஐராவத், குல்தர் கப்பல்கள் ஆகியன இந்த ஒத்திகையில் ஈடுபடுத்தப்பட்டன.

# இந்தியாவின் தேஜாஸ் போர் விமானங்களை வாங்க பல நாடுகள் ஆர்வம் தெரிவிப்பு



தேஜாஸ் போர் விமானங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஆர். மாதவன் செய்திநிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர், தேஜாஸ் போர் விமானங்களை வாங்குவதற்கு பல நாடுகள் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளன. அடுத்த 2 ஆண்டுகளில் முதல் ஏற்றுமதி முன்பதிவு கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்திய விமானப்படைக்கு 83 தேஜாஸ் போர் விமானங்களை வழங்குவது என்பது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கும். இப்படி வழங்கி முடிக்கும் வரையில் ஆண்டுக்கு 16 போர் விமானங்கள் தயாரித்து முடிக்கப்படும் எனவும் கூறினார். சீனாவின் ஜேஎப் – 17 போர் விமானத்தைக் காட்டிலும், தேஜாஸ் மார்க் 1ஏ போர் விமானம் சிறந்த செயல்திறனை கொண்டிருப்பதாகவும், சிறந்த இயந்திரம், ரேடார் அமைப்பு மற்றும் மின்னணு சாதனங்களை கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# லாலு பிரசாத் உடல்நிலை மோசமடைவு டெல்லி எய்ம்ஸ் மருத்துவமைக்கு மாற்றம்



கால்நடை தீவன ஊழல் வழக்கில் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டிருந்த பீகார் முன்னாள் முதல் – மந்திரி லாலு பிரசாத் யாதவ், உடல் நலக்குறைவு காரணமாக ராஞ்சியில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு உடல்நிலை மோசமடைந்ததை தொடர்ந்து நேற்று முன்தினம், விமான அம்புலன்ஸ் மூலம் டெல்லி எய்ம்ஸ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அவர் விரைவில் உடல்நலம் தேற அரசியல் கட்சிகளுக்கு அப் பாற்பட்டு பல்வேறு தலைவர்களும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்தவகையில் லாலுவின் அர சியல் எதிரியும், பீகார் முதல் – மந்திரியுமான நிதிஷ் குமாரும் வாழ்த்து தெரிவித்து உள்ளார்.

லாலு எய்ம்ஸ் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டது குறித்து அவரிடம் நேற்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் பதிலளிக்கையில், 'அவர் விரைவில் குணமடைய வேண்டும் என்பது எனது தீவிர ஆசை ஆகும்' என்று கூறினார்.

கடந்த 2018 ஆம் ஆண்டிலும் லாலுவின் உடல்நிலை மோசமடைந்தபோது, அடிக்கடி அவருடைய உதவியாளர்களை அழைத்து லாலுவின் உடல்நலம் குறித்து விசாரித்து வந்ததாக கூறிய நிதிஷ்குமார், இதற்காக பல்வேறு தரப்பில் இருந்து விமர்சனங்களையும் எதிர்கொண்டேன் எனவும் தெரிவித்தார்.

யாழ் கலாலயா பயிற்சியகம்

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
வெளிநாடுகளுக்கு செல்ல இருக்கும் மங்கையரே!!
மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!!!

உங்களுக்கான 3 மாத கால பயன்மிகு பயிற்சிகள் 28.01.2021 தைப்பூசத்தன்று காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

- கேக் ஐஸிங்
- கூந்தல் அலங்காரம்
- அழகுக்கலை (Makeup)
- Facial
- பல விதங்களில் சேலை அணியும் முறைகள்
- சிற்றுண்டிகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு உணவுகள் தயாரித்தல்.

- பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.
- இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்
- சனி – ஞாயிறு அல்லது கிழமை நாள் பிரிவில் இணையலாம்.

மேலும் விவரங்களுக்கு நேரில் வருகை தரவும்.

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) அங்கீகரிக்கப்பட்டது.
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் போதனா வைத்தியசாலையின் பின் வீதி

கல்யாணமாலை



வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1979.03.20
மதம் - இந்து V
நட்சத்திரம் - கேட்டை
செவ் - 8 இல்
பாவம் - 73
கல்வி - A/L
தொழில் - U.K. PR
எதிர்பார்ப்பு - U.K. வரவிரும்பும் பெண்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1987.11.15
மதம் - இந்து V
நட்சத்திரம் - பூரம்
செவ் - --
பாவம் - 23 1/2
கல்வி - கனடா பட்டதாரி
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - கனடா வரவிரும்பும் பெண்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

# கடும் குளிரின் மத்தியிலும் ரஷ்யர்கள் போராட்டம் ரஷ்ய எதிர்கட்சித் தலைவரை விடுவிக்க கோரிக்கை!

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னி கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யாவின் தூரக் கிழக்குப் பகுதியான சைபீரியாவின் பனியில் உறைந்துபோன தெருக்களிலிருந்து மாஸ்கோவின் செயின்ட் பீட்டர் ஸ்பர்க்கின் பிரமாண்ட தெருக்கள் வரை, பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு போராட்டம் நடத்தி வருகிறார்கள். ரஷ்ய பொலிஸார் நவால்னியின் ஆதரவாளர்களில் ஆயிரக்கணக்கானோரைக் கைது செய்து வருவதால் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை தீவிரமாக எதிர்த்து வருகிறார் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி நோவிசோக் எனப்படும் கடுமையான வித் தாக்குதலுக்கு ஆளாகி, கோமா நிலைக்குச் சென்றார். மருத்துவர்களின் பல மாத சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்த நவால்னி, எனக்கு விஷம் கொடுக்கப்பட்டதில் ரஷ்ய அதிபர் புடினின் பங்கு இருக்கிறது என்றும், தான் ரஷ்யா திரும்புவதைத் தடுக்க புடின் பல்வேறு முயற்சிகளை எடுப்பதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தார். இந்தத் தகவலை ரஷ்ய அதிபர் மாளிகை உடனடியாக மறுத்திருந்தது.



இந்த நிலையில், ஜனவரி 17 ஆம் திகதி ஜேர்மனியிலிருந்து அலெக்ஸி நவால்னி ரஷ்யா திரும்பினார். நன்கொடையாக வந்த சுமார் 40 லட்சம் டொலர் மதிப்பிலான தொகையை தன் சொந்த செலவுகளுக்குப் பயன்படுத்திக்கொண்டார் என்றும் டிசெம்பர் மாத விசாரணைக்கு ஆஜராகவில்லை என்று கூறி, பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள நவால்னியை விடுவிக்க வேண்டும் என்று அவரது ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். 'வெட்கம்' 'கொள்ளைக்காரர்கள்' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் போராட்டம் நடத்துகிறார்கள்.

குளிர்காலம் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் இருந்தபோதிலும், நவால்னியை விடுவிக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக நவால்னியின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். பல இடங்களில் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் மோதல் ஏற்பட்டுள்ளது .போராட்டக்காரர்களை பொலிஸார் விரட்டியடிக்கும் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதில், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

## நேபாள பிரதமர் சர்மா ஒலி கட்சியில் இருந்து நீக்கம்

நேபாள நாட்டின் பிரதமராக செயல்பட்டு வருபவர் கே.பி.சர்மா ஒலி. இவர் ஆளும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்து வருகிறார்.



பிரதமர் கே.பி.சர்மாவுக்கும், ஆளும்கட்சியின் நிர்வாகக்குழு தலைவர் புஷ்ப கமல் தஹார் பிரசந்தாவுக்கும் இடையே அதிகாரபோட்டி ஏற்பட்டது.

இதனால் பாராளுமன்றத்தை கலைக்க பிரதமர் கே.பி.சர்மா ஒலி கடந்த ஆண்டு 20 ஆம் திகதி பரிந்துரைத்தார். இதையடுத்து, வரும் ஏப்ரல் – மே மாதத்தில் தேர்தல் நடத்தவும் அதிபர் பித்யா தேவி பண்டாரி உத்தரவிட்டார்.

இந்த விவகாரத்தால் ஆளும் நேபாள கம்யூனிஸ்டு கட்சி கே.பி.சர்மா ஒலி தலைமை மற்றும் புஷ்ப கமல் தஹார் தலைமை என இரண்டாக பிளவுபட்டது.

பாராளுமன்றத்தைக் கலைக்க பிரதமர் கே.பி.சர்மா ஒலி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து புஷ்ப கமல் தஹாரின் தலைமையிலான பிரிவு நேபாளம் முழுவதும் போராட்டம் நடைபெற்று வருகிறது. மேலும், நேபாள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பதவியில் இருந்து கடந்த சில நாள்களுக்கு முன்னர் கே.பி.சர்மா ஒலி நீக்கப்பட்டார்.

இந்நிலையில், புஷ்ப கமல் தஹார் தலைமையிலான கம்யூனிஸ்டு கட்சியின் பிரிவின் மத்திய கமிட்டி கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கே.பி.சர்மா ஒலியை நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்க முடிவு எடுக்கப்பட்டது.

இதையடுத்து, நேபாளம் கம்யூனிஸ்டு கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து கே.பி.சர்மா ஒலி நீக்கப்படுவதாக புஷ்ப கமல் தஹார் தலைமையில் பிளவடைந்த கம்யூனிஸ்ட் கட்சியின் செய்தித் தொடர்பாளர் நாராயண் கஞ்ச் ஸ்ரீஸ்தா தெரிவித்துள்ளார்.

## சீனாவில் தங்க சுரங்க விபத்தில் சிக்கிய 22 பேரில் 11 பேர் பத்திரமாக மீண்டனர்





சீனாவின் ஷான்டோங் (Shandong) மாகாணத்தில் உள்ள சுரங்கத்தில் கடந்த 10ஆம் திகதி ஏற்பட்ட விபத்தில் 22 சுரங்க பணியாளர்கள் பூமிக்கடியில் சிக்கினர் அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். இந்நிலையில், 11 பேர் உயிருடன் உள்ளதாகவும், எஞ்சிய 10 பேரைக் காணவில்லை என்றும் மீட்புப் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, கடந்த 2 வாரங்களாக தொடர்ந்து மீட்புப் பணி நடைபெற்று வந்த நிலையில், கடும் போராட்டத்துக்கு பின் பூமிக்கடியில் இருந்து 11 தொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம், காணாமல் போன 10 பேர் சுரங்கத்தின் 2 ஆயிரம் அடிக்கு கீழ் சிக்கி கொண்டிருக்கலாம் எனவும், இவர்களை மீட்க மேலும் 2 வாரங்களாகும் எனவும் மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

## 27 மனைவிமார், 150 குழந்தைகளுடன் கூட்டுக்குடும்பமாக மகிழ்வான வாழ்கை

64 வயதாகும் வின்ஸ்டன் பிளாக்மோரும், ஒன்றல்ல இரண்டல்ல 27 மனைவிகளும், 150 குழந்தைகளும் கனடாவிலுள்ள, பவுண்டிபுல் பகுதியில் ஒரே வீட்டில், வானத்தைப்போல படத்தில் வரும் விஜயகாந்தின் குடும்பம் போல, கூட்டு குடும்பமாய் வாழ்ந்து வருகின்றனர்.

திருமணத்துக்கு பின்னர், ஒருவரின் வாழ்க்கை முற்றிலும் மாறிவிடும். கணவன்மார்கள், மனைவியின் ஆசையை நிறைவேற்றுவது, அவர்களை மகிழ்விப்பது என மொத்தமாக மாறிப்போவர்கள். பலரிடம் திருமண வாழ்வு குறித்து கேட்டாலே, சலிப்புடன் தான் பதில் வரும்.ஆனால் இந்த கதையோ வித்தியாசமானது

சுமார் 200 குடும்ப உறுப்பினர்களுடன் பாலி கேமி (Polygamy) முறையில், மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றனர். பாலிகேமி(Polygamy) என்பது கணவன் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளுடன் வாழும் முறை ஆகும். வின்ஸ்டனின் 17ஆவது மனைவியின் மூத்த மகன் மெர்லின். இவரின் மூலம் தான் மெகா குடும்பம் பற்றியான தகவல் வெளியாகி, வைரலாகி வருகிறது.



## பொருளாதாரத்தை சரிவில் இருந்து மீட்க பாகிஸ்தான் மிகப்பெரிய பூங்கா அடமானம்



பாகிஸ்தான் பொருளாதாரத்தை சரிவில் இருந்து மீட்க, அந்நாட்டின் மிகப்பெரிய பூங்காவை 50 ஆயிரம் கோடி பாகிஸ்தான் ரூபாய்க்கு (சுமார் 61 ஆயிரம் இலங்கை ரூபாய்) அடமானம் வைக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துடனான உறவில் விரிசல் ஏற்பட்டதால், அந்நாட்டின் அந்நிய செலவானியில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டது.

இதையடுத்து, அரசின் நிதி ஆதாரத்தை அதிகரிக்கும் நடவடிக்கையாக, தலைநகர் இஸ்லாமாபாத்தில், 759 ஏக்கர் பரப்பளவில் உள்ள எப் 9 (F – 9) பூங்காவை பிரதமர் இம்ரான் கான் அடமானம் வைத்து பாகிஸ்தான் கோடி ரூபாய் மதிப்பில் 50 ஆயிரம் கோடி (சுமார் 61 ஆயிரம் இலங்கை ரூபாய்) கடன் வாங்கத் திட்டமிட்டுள்ளதாகவும், வரும் செவ்வாய்க்கிழமை நடக்கும் அமைச்சரவை கூட்டத்தில் இது குறித்து முடிவெடுக்கப் போவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஒரே ராக்கெட்டில் 143 செயற்கைக்கோள்கள் ஸ்பேஸ்எக்ஸ் புதிய உலக சாதனை



எலான் மஸ்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் விண்வெளித் தொழில்நுட்பத்தில் தொடர்ந்து முத்திரை பதித்து வருகிறது. அவ்வகையில், இந்த நிறுவனம் தயாரித்த பால்கன் – 9 ரொக்கெட் நேற்று இரவு விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த ரொக்கெட்டில் 143 சிறிய ரக செயற்கைக் கோள்கள் அனுப்பப்பட்டன.

வெற்றிகரமாக செலுத்தப்பட்ட இந்த ரொக்கெட், புவி வட்டப் பாதையை நோக்கி பயணிக்கத் தொடங்கியதும், முதல்கட்டமான பூஸ்டர் தனியாக பிரிந்து பூமிக்கு திரும்பியது. அது அட்லாண்டிக் கடலில் நிறுத்தப்பட்ட மிதவையில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

# பொருள்களின் விலை உயர்வை எதிர்த்து ஜே.வி.பி. போராட்டம்!










மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குமாறு வலியுறுத்தியும், பொருள்கள், சேவைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பூண்டுலோயா நகரில் போராட்டம் நடைபெற்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் மஞ்சுள சுரவீர தலைமையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற இந்தப் போராட்டம் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

'வாழ்க்கைச்சுமை அதிகரித்துள்ளதால் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நிவாரணம் வழங்கவேண்டிய அரசாங்கம், மாறாக பொருள்களின் விலைகளை அதிகரித்து வருகின்றது. இதனை எம்மால் ஏற்கமுடியாது. ஆகவே, பொருள்கள், சேவைகளின் விலைகள் உடனடியாகக் குறைக்கப்படவேண்டும்' என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர். அத்துடன் -

பெருந்தோட்டத் தொழிலாளர்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றிவரும் ஆளும் வர்க்கமும், தொழிற்சங்கங்களும் இம் முறையும் கைவிரிப்பதற்கு முயற்சிக்கின்றன.

எது எப்படியிருந்தாலும் அவர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும். நில உரிமை என்பது அரசாங்கத்திடமே இருக்கின்றது. எனவே, அரசாங்கத்தால் கொள்கை ரீதியில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை கம்பனிகள் ஏற்க வேண்டும். - என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## இலங்கைக்கு எதிரான முயற்சி ஐ.நாவில் தோற்கடிக்கப்படும்!

### சரத் வீரசேகர நம்பிக்கை



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கூட்டத்தொடரில் இம்முறை இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் முன்னெடுத்துள்ள முயற்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்படும். உள்ளக பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச அரங்கில் முயற்சிப்பது பயனற்றது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத்தொடர் தொடர்பாக வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் தீர்மானம்மிக்கது. கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிராகப் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், சர்வதேச நாடுகள் ஆகியவை ஒன்றினைந்து பல பிரேரனைகளைக் கொண்டுவந்தன.

இவற்றில் 30 1 பிரேரணையை பிரதானமாகக் கருத வேண்டும். இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரனை வழங்கியமை தேசத்துரோக செயலாகும்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமை மீறள்கள் இடம்பெற்றன என சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை நல்லாட்சி அரசு நியாயப்படுத்தியது.

இராணுவத்தினரைத் தண்டிக்கும் செயற்பாடுகளை நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்தது. அரசியல் நோக்கங்களுக்காகவும், புலம்பெயர் அமைப்புக்களை திருப்திப்படுத்துவதற்காகவும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்.

சர்வதேச அரங்கில் இலங்கையைப் பாதுகாக்க நல்லாட்சி அரசாங்கம் முறையான நடவடிக்கைகளை 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கவில்லை.

அரச சார்பற்ற நிறுவனமாக செயற்பட்டு இலங்கையைப் பாதுகாக்கும் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்தோம். 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணியாக இருந்தது.

இம்முறை மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்க புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முன்னெடுத்துள்ள திட்டங்கள் தோற்கடிக்கப்படும். இதுவரையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. உள்ளக பிரச்சினைக்கு சர்வதேச அரங்கில் தீர்வு காண்பது சாத்தியமற்ற செயற்பாடாகும்.

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எதிராக செயற்படுபவர்கள் தமிழ் மக்களின் முன்னேற்றம் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இலங்கையைக் குற்றஞ்சாட்டி ஒரு தரப்பினர் சர்வதேசத்தில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

இது அவர்களின் தனிப்பட்ட விருப்பமாகும் சுய நலத் தேவைக்கான ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பயன்படுத்திக் கொள்வது முறையற்ற செயற்பாடாகும்.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் தமிழ் அரசியல் கட்சிகள் யுத்த காலத்தில் தமிழ் மக்களைப் பாதுகாக்கவில்லை.

இவர்கள் கொழும்பில் சுகபோக வாழ்க்கையை அந்தக் காலத்தில் வாழ்ந்தார்கள். 30 வருட கால யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டதல்ல.

பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் தேவை அரசாங்கத்துக்கு இருந்தது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் சுமார் 12 ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்களுக்கு சிறந்த எதிர்காலம் வழங்கப்பட்டது. உலகில் வேறெந்த நாடுகளும் இவ்வாறு செயற்படவில்லை.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டன. தமிழ் மக்களுக்கு மாகாண சபை தேர்தல் ஊடாக அரசியல் உரிமை வழங்கப்பட்டது.

தமிழ் மக்களின் உரிமைகளை பறிக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. அனைத்து இன மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. - என்றார்.

## வவுனியாவில் முடக்கப்பட்ட பகுதிகளில் வியாபார நிலையங்களை திறக்க அனுமதி

வவுனியாவில் முடக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்கள் இன்று (திங்கட்கிழமை) மீண்டும் நிபந்தனைகளுடன் வழமை போன்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்த நிலையில், பல இடங்கள் முடக்கப்பட்டு வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் உரிமையாளர்கள், ஊழியர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நகரின் பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி, மில் வீதி, சூசைப்பிள்ளையார் குள வீதி, கந்தசுவாமி கோவில் வீதி, ஹொரவப்பொத்தானை வீதியின் ஒரு பகுதி என்பன சுகாதாரப் பிரிவினரால் முடக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தன.

இம்மாதம் 21, 22, 23 ஆகிய மூன்று தினங்களாக பி.சி.ஆர். அல்லது அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பிராந்திய சுகாதார பணிமனையால் வழங்கப்படும் பரிசோதனை அட்டையை வைத்திருக்கும் உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் மட்டுமே வர்த்தக நிலையங்களை திறந்து பணிபுரிவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

பி.சி.ஆர். அல்லது அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளத் தவறியவர்கள் வர்த்தக சங்க காரியாலயத்தில் படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து வழங்குவதன் மூலம் நாளை செவ்வாய்க்கிழமை நகரசபை மண்டபத்தில் பரிசோதனையை மேற்கொண்டு அட்டையை பெற்ற பின்னரே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் எனவும் மீறி செயற்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா நகரப் பகுதிகள் தனிமையிலிருந்து விடுவிப்பு!

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக வவுனியா நகரில் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம், இன்று (திங்கட்கிழமை) தளர்த்தப்பட்டுள்ளது.

வவுனியா - பட்டாணிச்சூரை சேர்ந்த கர்ப்பிணி பெண் மற்றும் பல்கலைகழக மாணவர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து குறித்த கிராமம் முடக்கப்பட்டது.

மேலும் வவுனியா நகரப் பகுதியில் தொற்றாளர்கள் அதிகரித்துவந்த நிலையில் பிரதான நகரம் உட்பட்ட 19 கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குசட்டம் அமுல்படுத்தப்பட்டு, முடக்கப்பட்ட நிலையில் கடந்த 18 ஆம் திகதி வவுனியா நகர மத்தி தவிர்ந்த ஏனைய பகுதிகள் விடுவிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று மில் வீதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தனிமைப்படுத்தப்பட்ட வியாபார நிலையங்களும் மூடப்பட்டுள்ளமையுடன், வவுனியா மொத்த வியாபார நிலையமும் மூடப்பட்டுள்ளது.

மேலும், வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் அன்டிஜன் பரிசோதனை செய்யப்படாத பெருமளவான வர்த்தக நிலையங்கள், சுகாதார பரிசோதகர்களால் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.01.2021இல் வெளியிடப்பெற்றது.